**செய்தி வெளியீடு எண்: 727** **நாள்: 11.10.2018**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 10.10.2018 அன்று தலைமைச் செயலகத்தில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் சேலம் மாவட்டம், ஆத்தூரில் 1 கோடியே 11 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஆதிதிராவிடர் நலப்பள்ளி மாணவர் விடுதிக் கட்டடத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், ஆதிதிராவிடர் நலப்பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியருக்காக 14 கோடியே 55 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 9 விடுதிக் கட்டடங்கள் மற்றும் 7 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின பள்ளிகளுக்கான கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் மற்றும் அறிவியல் ஆய்வுக் கூடங்களையும் திறந்து வைத்தார்கள்.

அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின குழந்தைகளும் இடைநிற்றல் இன்றி கல்வி கற்று, சமுதாயத்தில் உயர்ந்த நிலையை அடைய வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன், அவர்களுக்கு கட்டணமில்லாக் கல்வி, மதிய உணவு, விலையில்லா மிதிவண்டி, விலையில்லா கல்வி உபகரணங்கள் மற்றும் சீருடை, கல்வி ஊக்கத் தொகை வழங்குதல், தங்கிப் பயிலும் விடுதிகள் கட்டுதல் போன்ற எண்ணற்ற நலத் திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், சேலம் மாவட்டம், ஆத்தூரில் 1 கோடியே 11 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஆதிதிராவிடர் நலப்பள்ளி மாணவர் விடுதிக் கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள். இந்த விடுதிக் கட்டடமானது, 5230 சதுர அடி பரப்பளவில் தரை மற்றும் முதல் தளத்துடன், 50 மாணவர்கள் தங்கும் வசதியுடன், உணவுக்கூடம், சமையலறை, குளியல் மற்றும் கழிவறைக்கூடம், சூரியமின்சக்தி வசதி, குடிநீர் வசதி உள்ளிட்ட வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

மேலும், இராமநாதபுரம் மாவட்டம் - நீராவி, புதுக்கோட்டை மாவட்டம் - மறமடக்கி மற்றும் கீரனூர், கடலூர் மாவட்டம் – சேமக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம் – கல்லூரணிக்காடு, சிவகங்கை மாவட்டம் - சிவகங்கை ஆகிய இடங்களில் 6 கோடியே

81 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஆதிதிராவிடர் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான 6 விடுதிக் கட்டடங்கள் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டம் – பொலம்பாக்கம், புதுக்கோட்டை மாவட்டம் - கல்லாக்கோட்டை, விழுப்புரம் மாவட்டம் – எலவனாசூர்கோட்டை ஆகிய இடங்களில் 3 கோடியே 42 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஆதிதிராவிடர் பள்ளி மாணவியருக்கான 3 விடுதிக் கட்டடங்கள்;

அரியலூர் மாவட்டம் – வெத்தியார்வெட்டு, அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளி, திருவாரூர் மாவட்டம் – அபிஷேககட்டளை, அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளி, காஞ்சிபுரம் மாவட்டம் – தையூர் மற்றும் மீனம்பாக்கம் அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளிகள், அனகாபுத்தூர் – அரசு ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளி, சேலம் மாவட்டம் - பகுடுப்பட்டு, அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட உயர்நிலைப் பள்ளி மற்றும் சேலம் மாவட்டம் – சிக்கனம்பட்டி, அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளி ஆகிய பள்ளிகளில் 4 கோடியே 32 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் மற்றும் அறிவியல் ஆய்வுக்கூடங்கள்;

என மொத்தம் 15 கோடியே 66 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஆதிதிராவிடர் நலப்பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியருக்கான 10 விடுதிக் கட்டடங்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின பள்ளிகளுக்கான கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் மற்றும் அறிவியல் ஆய்வுக் கூடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி வி.எம். ராஜலெட்சுமி, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஒட்டெம் டாய், இ.ஆ.ப., ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநர் திரு.க.வீ. முரளீதரன், இ.ஆ.ப., தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.சஜ்ஜன்சிங் ஆர். சவான், இ.ஆ.ப., பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் திரு. டி. ரிட்டோ சிரியாக், இ.வ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

***********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 11.10.2018**